A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 12 / 2021</u>**

**<u>BY RPAD</u>**

திரு.பழ. இராமன்,
48– மேல அக்ரஹாரம்,
கிருஷ்ணராயபுரம் (அஞ்சல்),
கரூர் மாவட்டம் – 639 102. . . . . மேல்முறையீட்டாளர்
(திரு. பழ. இராமன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ.கா/குளித்தலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
98, சிறுபூஙகா தெரு, காவேரி நகர்,
குளித்தலை–639 104.

2. உதவி செயற்பொறியாளர்/இ.கா/குளித்தலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
39/49, வைகைநல்லூர் அக்ரஹாரம்,
குளித்தலை – 639 104.

3. உதவி பொறியாளர்/இ.கா/மாயனூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11KV துணை மின்நிலைய வளாகம்,
மாயனூர், குளித்தலை தாலுக்கா – 639 102.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு.M.சேகரன், செயற்பொறியாளர்/இ.கா/குளித்தலை
திரு.G.பன்னீர்செல்வம், உதவி செயற்பொறியாளர்/இ.கா/குளித்தலை
திரு.S.புகழேந்தி, உதவி மின்பொறியாளர்/இ.கா/மாயனூர்)

**<u>கேட்புரை நாள்: 10–03–2021</u>**

**<u>ஆணை நாள் : 20–04–2021</u>**

27.01.2021 அன்று பெறப்பட்ட திரு.பழ. இராமன், 48–மேல அக்ரஹாரம், கிருஷ்ணராயபுரம் (அஞ்சல்), கரூர் மாவட்டம் – 639 102 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண்.12/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 10.03.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பு எண் 044–013–2436–ஐ வீட்டு மின் இணைப்பாக மாற்ற வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான கட்டிடத்தின் தரைத்தளத்தில் மூன்று மின் இணைப்புகளும் மற்றும் முதல் தளத்தில் இரண்டு மின் இணைப்புகளும் வர்த்தக மின் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளதாகவும் முதல் தளத்தில் உள்ள மின் இணைப்பு எண் 044–013–2436–ஐ வீட்டு மின் இணைப்பாக மாற்றம் கோரி உதவி பொறியாளர்/இ.கா/மாயனூர் அவர்களிடம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்தின் பேரில் உதவி பொறியாளர்/இ.கா/மாயனூர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் இடத்தை கள ஆய்வு செய்து முதல் தளத்தில் ஒரே அறை மட்டும் உள்ளதால் (044–013–2436 TF V) வீட்டு மின் இணைப்பிற்கான முகாந்திரம் இல்லாததால் வீட்டு மின் இணைப்பாக வழங்க இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே தனது வர்த்தக மின் இணைப்பை வீட்டு மின் இணைப்பாக மாற்றக் கோரி, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் கரூர் மின்பகிர்மான வட்டத்தை 13.08.2020 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கரூர் மின்பகிர்மான வட்டம் 16.11.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு</u> –

கரூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 16.11.2020 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் தீர்வு:</u>*

*மனுதாரர் திரு.பழ.ராமன் அவர்கள் தனது வீட்டிற்கு இரண்டு மின் இணைப்புகள் வீதப்பட்டி V—ல் வழஙகப்பட்டது எனவும் ஆனால் அதில் ஒன்று வீடாக பயன்படுத்தி வருவதால் அதற்கு வீட்டிற்கான வீதப்பட்டி (IA)—க்கு மாற்றம் செய்து கொடுக்குமாறு கோரியுள்ளார்.*

*இது தொடர்பாக எதிர்மனுதாரர்கள் தெரிவிக்கையில் நுகர்வோரது வளாகத்தில் 3 வீட்டு மின் இணைப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதே வளாகத்தில் தரைத்தளத்தில் பாத்திரகடைக்கு ஒரு கடை மின்இணைப்பு வேண்டியும் அதற்கு மேல் உள்ள ஒரு அறையில் உள்ள கடை மின் இணைப்பை வீட்டு மின் இணைப்பாக மாற்றித்தர வேண்டியும் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. அவற்றை ஆய்வு செய்கையில் மேல் மாடியில் உள்ள அறையில் கடை மின் இணைப்பே வழஙகப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.*

*எழுவினா: மேற்படி நுகர்வோரின் முதல் மாடியில் உள்ள அறைக்கு வீதப்பட்டி (V) பொருந்துமா என்பதே ஆகும்.*

*மேற்படி வினாவிற்கு தகுந்த விடைகாணும் வகையில் இம்மன்றம் குளித்தலை கோட்டத்தை சாராத உதவி செயற்பொறியாளர் ஒருவரை மேற்படி இடத்தை அறிந்து நுகர்வோர் கூறியுள்ளபடி அஙகு வீட்டு பயன்பாடு உள்ளதா? என்பதை கண்டறிந்து அறிக்கை அளிக்கும்படி கேட்டுக்கொண்டது. அதன்படி உதவி செயற்பொறியாளர்/புகளூர் அவர்கள் தனது 07.11.2020 தேதியில் கடிதத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட விவரஙகளை தெரிவித்துள்ளார்.*

*அதன்படி கரூர் – திருச்சி மெயின்ரோட்டில் சித்தலவாய் பகுதியில் உள்ள திரு.பழ.இராமன் என்பவர் வீடு இரண்டு தளஙகளை கொண்டுள்ளதாகவும், முதல் தளத்தில் ஒரு வர்த்தக மின் இணைப்பும் இரு வீட்டு மின் இணைப்புகளும் உள்ளது என்றும் இரண்டாம் தளத்தில் (1 floor) ஒரு வர்த்தக இணைப்பும் ஒரு வீட்டு மின் இணைப்பும் உள்ளது என்று தெரிவித்துள்ளார். இதில் வர்த்தக மின்இணைப்பு உள்ள*

*இடத்தை ஆராய்ந்ததில் அங்கு யாரும் குடியிருக்கவில்லை என்பதும் ஒரே அமைவிடமாகவும் சமையல் செய்வதற்கான எந்த உபகரணங்களும் இல்லாது கழிவறை மற்றும் குளியல் அறை அமையப்பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளார்.*

*இதிலிருந்து வீட்டின் மேல்தளத்தில் உள்ளவராக கூறப்படுபவர்கள் அங்கில்லை என்பதும் மேல் தளத்தில் குடியிருப்பு ஏதுமில்லை என்பதும் அங்கு ஒருவர் மட்டுமே தங்கி இருந்துள்ளார் என்பதும் புலப்படுகிறது. வாரிய விதிகளின்படி குடியிருப்பு இல்லாத அதாவது சமையல் அறை படுக்கை அறை போன்றவை இல்லாத இடமாக இருந்து அதனை வாடகைக்கு விட்டால் அங்கு வீதப்பட்டி (V)–ல் மட்டுமே மின் உபயோகம் இருக்க வேண்டும் என்பதால் மேற்படி நுகர்வோரின் மேல் தளத்தில் உள்ள அறைக்கு வீதப்பட்டி (IA)–ல் தான் இருக்க வேண்டும் என நுகர்வோரின் கோரிக்கையை இம்மன்றம் நிராகரித்து உத்திரவு வழஙகுகிறது.”*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தஙகளது தரப்பு வாதஙகளை எடுத்துரைப்பதற்கு வசதியாக **10.03.2021** அன்று காணொளி மூலம்கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் திரு.பழ. இராமன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

**4.3** எதிர்மனுதாரர்கள் திரு.M.சேகரன், செயற்பொறியாளர் / இ.கா / குளித்தலை, திரு.G. பன்னீர்செல்வம், உதவி செயற்பொறியாளர்/இ.கா/குளித்தலை மற்றும் திரு. S. புகழேந்தி, உதவி மின்பொறியாளர்/இ.கா/மாயனூர், கரூர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தஙகளுடைய வாதஙகளை எடுத்துரைத்தனர்.

**4.4** மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதஙகள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணஙகள் அல்லது பணியாளர் ஒழுஙகு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுஙகுமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:**

5.1 மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கு இரு மின் இணைப்புகள் வேண்டி கட்டணமாக தனித்தனியாக ரூ.3418/– வீதம் இரண்டுக்கும் ரூ.6836/– செலுத்தியதாகவும் ரசீது எண்கள் OTRK044AR251020 நாள் 29.02.2020 மற்றும் TRT 044 AR 251021என்றும், அதன் பேரில் தன்னை விசாரித்த உதவிப்பொறியாளரிடம் கீழே (தரை தளத்தில்) உள்ளது கடை என்றும் அதே அளவில் மேலே முதல் தளத்தில் உள்ளது குடியிருப்பு வீடு என்றும் அதில் ஒரு தனி நபர் குடியிருந்து வருகிறார் என்றும் தெரிவித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 ஒரே அறை என்றால் அதற்கும் வர்த்தக மின் இணைப்பு மட்டுமே வழங்க முடியும் என்றும், தான் சொல்வதை உதவி மின் பொறியாளர் எடுத்து கொள்ளவில்லை என்றும் அதன்பின் வர்த்தக மின் இணைப்பாக இருக்கட்டும் இரண்டொரு மாதங்களுக்குப் பிறகு வீட்டு இணைப்பாக மாற்றிக் கொள்ளலாம் என்று கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அதன்பின் பொறுத்தப்பட்ட மீட்டர்களில் மாடியில் உள்ள இணைப்பு எண் 2436 மீட்டர் சோதனை செய்யப்படாமல் பொறுத்தப்பட்டது பற்றியும் அதிவேகமாக மீட்டர் ஓடுவது பற்றியும் நேரில் சொல்லிய பிறகு 28.04.2020ல் உதவிப் பொறியாளருக்கு பதிவு அஞ்சலில் ஒரு மனு அனுப்பியதாகவும் அதன் நகலை குளித்தலை செயற்பொறியாளருக்கு பதிவு அஞ்சலில் அனுப்பியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அதன்பின் எந்த நடவடிக்கையும் இல்லாததால் 09.06.2020 அன்று உதவிப் பொறியாளருக்கு மீண்டும் பதிவு தபாலில் மனு அனுப்பியதாகவும், அதைப் பெற்ற பின் நேரில் வந்து முதல் முறையாக இடத்தை பார்வையிட்ட உதவிப் பொறியாளர் SC 2435 எர்த் ஆகிறது அதனால் கூடுதல் ரீடிங் காட்டுகிறது என்றும்,SC 2436 ஐ பார்வையிட்டு SC 2435 ஐ விட மிகவும் சரியாக இருக்கிறது என்று உதவி பொறியாளர் கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.அப்படியானால் SC 2435 விட மிகக் குறைவாக மின் உபயோகமுள்ள 2436 அதைவிட அதிகமான ரீடிங் காட்டுவதாகவும் மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட 27.07.2020 வரை அதே நிலை தொடர்ந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.5** மாடியில் உள்ள SC **2436–க்கு** ஒருவர் வசிப்பதால் வீட்டு சர்வீஸ் வேண்டும் என்பதற்கு ஒரே அறைக்கு எப்படி வீட்டு சர்வீஸ் வழஙக முடியும் என்று உதவி பொறியாளர் மறுத்துவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.6** உதவி மின்பொறியாளர் தனது **16.06.2020** நாளிட்ட விளக்கம் அளிக்கும் கடிதத்தில் **044–013–2436** வணிக மின் இணைப்பு வழஙகப்பட்டுள்ள அறையானது பழைய சாமான்கள் ஒரு பகுதியிலும், தனிநபர் ஒருவர் (school Teacher) வாடகைக்கு குடியிருந்து கொண்டு அவ்வப்போது Tuition எடுப்பதாகவும் தெரிய வந்ததின் அடிப்படையிலும்தான் வணிக மின் இணைப்பு வழஙகப்பட்டது என்றும் பின்னாலில் வீட்டு மின் இணைப்பாக மாற்றம் செய்யலாம் என்ற உறுதி மொழி எதுவும் அளிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.7** தனது கட்டிடத்தின் முன்பகுதி தேசிய நெடுஞ்சாலையத்துறையின் (NH 67) விரிவாக்கப் பணிகளுக்காக இடிக்கப்பட்ட போது அதிலிருந்த ஒருகதவுநிலை–ஜன்னல் அந்த வாடகைதாரரின் பெருந்தன்மையான அனுமதியுடன் அஙகே வைத்துள்ளதாகவும் வேறு எந்த பழைய சாமான்களும் அதில் இல்லை எனவும் பழைய சாமான்கள் வைக்கப்பட்டிருந்தால் அதற்கு வர்த்தக மின் இணைப்பு தான் வழஙகப்படுமென்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.8** தனது SC 2436 இணைப்புள்ள இடத்திற்கு வீட்டு மின் இணைப்பு வழஙக வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0** **<u>எதிர்மனுதாரரின் வாதஙகள்:</u>**

**6.1** மேல்முறையீட்டாளரின் கட்டிடஙகளுக்கு **(**கதவு எண் **48/5** மற்றும் **48/6)** இரண்டு புதிய மின் இணைப்புகள் வேண்டி விண்ணப்பம் அளித்திருந்ததாகவும், மேற்படி இடம் திரு.சு.கதிரேசன், வணிக உதவியாளர் மற்றும் திரு. இரா.முத்து, மின்பாதை ஆய்வாளர் ஆகியோரால் **29.02.2020** அன்று களஆய்வு செய்யப்பட்டதாகவும் மேற்படி கட்டிடத்தில் தரைத்தளத்தில் வாடகை பாத்திர கடையும் **(**கதவு எண் **48/5)** முதல் தளத்தில் ஒரே ஒரு அறையும் உள்ளதாகவும் ஆய்வில் தெரிய வந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். முதல் தளத்தில் உள்ள அறையில் ஒரே ஒரு நபர் மட்டும் (school teacher) தனியாக வசித்து வருவதும், மேற்படி அறையின் ஒரு பகுதியில் பழைய சாமான்கள் வைத்திருப்பதும்,

அவ்வப்போது பள்ளி மாணவர்களுக்கு Tution எடுக்கவும் மேற்படி அறை பயன்படுத்தி வருவது ஆய்வில் உறுதி செய்யப்பட்டு இரண்டு புதிய மின் இணைப்புகளும் வர்த்தக பயன்பாட்டில் **05.03.2020** அன்று **(044–013–2436** TF V & **044–013–2435** TF V) வழஙகப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.2** **28.04.2020** மற்றும் **09.06.2020** நாளிட்ட மனுவில் திரு.பழ. இராமன் அவர்கள் தான் இரண்டு புதிய மின் இணைப்புகள் வேண்டி விண்ணப்பம் அளித்து இருந்ததாகவும் தரைத்தளத்தில் உள்ள கடைக்கு வர்த்தக மின் இணைப்பும் மேலே உள்ள ஒரே ஒரு அறைக்கு வழஙகப்பட்டுள்ள வர்த்தக மின் இணைப்பை வீட்டு மின் இணைப்பாக பின்னர் மாற்றிக் கொள்ளலாம் என உதவி மின்பொறியாளர்/இ&கா/கிராமியம்/மாயனூர் அவர்கள் அளித்த உறுதிமொழியின் பெயரில் வர்த்தக மின் இணைப்பாக பெற்றுக்கொள்ள சம்மதித்ததாகவும் மேற்படி மின் இணைப்புகளில் உள்ள மின் அளவிகள் **(044–013–2436** TF V &**044–013–2435** TF V) பயனீட்டு அளவினை கூடுதலாக பதிவு செய்து வருவதாகவும் அதையும் மாற்றித்தர வேண்டி அளித்துள்ள மனுவிற்கு உரிய விளக்கம் உதவி மின்பொறியாளர்/இ&கா/கிராமியம்/மாயனூர் அவர்களால் **16.06.2020** அன்று நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் **16.06.2020** அன்று திரு பழ. இராமன் அவர்கள் முன்னிலையில் உதவி மின்பொறியாளர்/இ&கா/கிராமியம்/மாயனூர் அவர்களால் மின் அளவிகள் ஆய்வு செய்யப்பட்டு, மின் அளவிகள் நல்ல நிலையில் இயஙகி வருவதும், மேற்கண்ட மின் இணைப்புகளில் (common neutral)ஒயரிஙகில் சரி செய்யப்பட வேண்டும் என்று நேரிலும் கடிதம் மூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும், உதவி மின்பொறியாளர்/இ&கா/கிராமியம்/மாயனூர் தான் பின்னாளில் மின் இணைப்பு எண் **044–013–2436** மின் இணைப்பிற்கு விகிதப்பட்டி மாற்றம் (tariff change) செய்து தருகிறேன் என எந்த உறுதி மொழியும் நுகர்வோருக்கு அளிக்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.3** திரு. பழ. இராமன் அவர்களின் **23.07.2020** நாளிட்ட மனுவில் மின் இணைப்பு எண் **043–006–1679** TF V பயனீட்டு அளவு அதிகமாக வருவதாகவும், மின் பயனீட்டு அளவினை நேரில் பார்க்காமல் அதிக மின் கட்டணத் தொகை கணக்கிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததன் அடிப்படையில் **26.08.2020** அன்று உதவி மின்பொறியார்/கிராமியம்/மாயனூர் அவர்களால் கள ஆய்வு மேற்கொண்டு மின் அளவி நல்ல நிலையில் இயஙகி வருவது குறித்த தகவல் கடிதம் மூலம் மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர்

தெரிவித்துள்ளார். மேலும் மின் இணைப்பு (043–003–1679 TF V) பயன்பாடு அதிகமாக உள்ளதாகவும், மின் பயனீட்டு அளவினை பார்க்காமல் தவறுதலாக விதிக்கப்பட்ட மின் கட்டணத்தை சரி செய்து தர வேண்டும் என கோரியிருந்ததாகவும் கொரோனா நோய் தொற்று Covid 19 காரணமாக மார்ச் 2020 முதல் கணக்கீட்டு பணிகள் பாதுகாப்பு காரணமாக நடைபெறவில்லை எனவும், மின் பயனீட்டு அளவு குறித்த விபரம் 19.09.2020 நாளிட்ட உதவி மின்பொறியாளர்/இ&கா/கிராமியம்/மாயனூர் கடிதத்தில் திரு. பழ. இராமன் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.மேற்படி கட்டிடம் கொரோனாlockdown(23rd March 2020)அறிவிப்பிற்கு முன்னர் வரை இயங்கி வந்துள்ளதாகவும் 15.02.2020–க்கு பிறகு மின் பயனீட்டு அளவு 15.06.2020 அன்று கணக்கீட்டாளரால் எடுக்கப்பட்டுள்ளது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். அதன் விபரம் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| மாதம் | மின் பயனீட்டு அளவு | | மின் அளவு | மின் கட்டணம் ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ஆரம்பம் | முடிவு | | | |
| 02/2020 | 4500 | 4550 | 50 | 690/– | PGN INB 24911780/ 07.03.2020 |
| 04/2020 | 4550 | 4550 | 50 | 690/– | கொரோனா ஊரடங்கு முந்தைய மாத கட்டணம் |
| 06/2020 | 4550 | 4670 | 120 | 1,441/– | செலுத்த வேண்டிய தொகை ரூ.1441/–<br>ரூ. 1,441 – ரூ.690 / (PMC)<br>ரூ. 794/– (06/2020 மின் கட்டணத்திற்கு செலுத்த வேண்டிய தொகை) |

மேற்படி மின் இணைப்பிற்குண்டான கட்டணத் தொகை ரூ.794/– ஜூன் 2020 முதல் செலுத்தாத காரணத்தினால் மின் இணைப்பு கடந்த 12.10.2020 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் மின் கட்டணத் தொகை மற்றும் அபராத தொகையை செலுத்தும் பட்சம் மேற்படி துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு மறு இணைப்பு செய்யப்படும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான கட்டிடத்தில் தரைத்தளத்தில் உள்ள மூன்று மின் இணைப்புகளையும் (044–013–2435 TF V &044–013–856 TF IA, 044–013–863 TF IA) மற்றும் முதல் தளத்தில் (044–013–2436 TF V &044–013– 684 TF IA) இரண்டு மின் இணைப்புகளையும் செயற்பொறியாளர்/இ.கா/குளித்தலை மற்றும் உதவி பொறியாளர்/ இ.கா/ குளித்தலை ஆகியோர் நேரில் கள ஆய்வு செய்து அதன் பின்னர் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் மேற்படி இடத்தை குளித்தலை கோட்டத்தை சாராத உதவி

செயற்பொறியாளர்/இ.கா/புகளூர் அவர்களும் மாவட்ட குறைதீர்மன்ற ஆணையின்படி கள ஆய்வு மேற்கொண்டு விசாரணை செய்து அறிக்கை வழஙகியுள்ளார் என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.5** மின் இணைப்பு எண் **044–013–2435** TF V தரைத்தளத்தில் உள்ள வாடகை பாத்திர கடை மற்றும் முதல் தளத்தில் உள்ள ஒரே ஒரு அறை மட்டும் (**044–013–2436** TF V) வீட்டு மின் இணைப்பிற்குண்டான முகாந்திரம் இல்லாததால் வர்த்தக இணைப்பாக வழஙகப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.6** **16.06.2020** நாளிட்ட உதவி மின்பொறியார்/கிராமியம்/மாயனூர் அவர்கள் திரு.பழ. இராமன் அவர்களுக்கு சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டிருந்த கடிதத்தில் உள்ள ஒயரிங குறைபாடுகளை (common neutral) சரிசெய்து கொள்ள வேண்டியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின் இணைப்பு வழஙகப்பட்ட **05.03.2020** முதல் **19.10.2020** வரை **44–013–2436** TF V- க்குண்டான மின் கட்டணத் தொகை திரு. பழ.இராமன் அவர்களால் செலுத்தப்படாததால் மேற்கண்ட மின் இணைப்பு **05.11.2020** முதல் மின் துண்டிப்பில் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.மேலும், மேற்படி மின் இணைப்பின் பயனீட்டு அளவு **10.06.2020** அன்று உதவி மின்பொறியார்/கிராமியம்/மாயனூர் அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு விளக்கம் தெரிவித்திருந்ததின் அடிப்படையில் common neutral wiring குறைபாடு சரி செய்யப்பட்ட மின் பயனீட்டு அளவு முந்தைய மாதம் உபயோகம் **50** யூனிட்டிலிருந்து **0**–ஆக குறைந்துள்ளது. **16.06.2020** நாளிட்ட கடிதத்திலேயே மின் அளவிகள் கள ஆய்வு செய்யப்பட்டு நல்ல நலையில் இயஙகி வருவது மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.7** எனவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின்படி மின் இணைப்பு எண் **044–013–2436** வீட்டு மின் இணைப்பாக மாற்றம் செய்ய இயலாது என்பதையும் மற்றும் **043–006–1679** மின் இணைப்புக்கான நிலுவை தொகை ரூ.**2,788/–** செலுத்தும் பட்சத்தில் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு மறு இணைப்பு வழஙகப்படும் என்று மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.8** மேலும் மின் இணைப்பு எண் **043–006–1679** ற்குரிய நிலுவை தொகை ரூ.**2788/–** **20.02.2021** அன்று ரசீது எண்.TRK044IA2S1424 மூலம் நுகர்வோரால் செலுத்தியதன்

அடிப்படையில் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு 20.02.2021 அன்று மறு இணைப்பு செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :

7.1 இருதரப்பு வாதஙகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணஙகள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய கட்டிடத்திற்கு தரைத்தளத்தில் உள்ள ஒரு அறைக்கு வர்த்தக மின் இணைப்பும் அதே அளவில் முதல் தளத்தில் உள்ள ஒரு அறைக்கு குடியிருப்பு மின் இணைப்பும் வேண்டி எதிர்மனுதாரருக்கு விண்ணப்பித்ததாகவும், தரைத்தளத்தில் உள்ள கடைக்கு வர்த்தக மின் இணைப்பு வழஙகப்பட்டதாகவும் முதல் தளத்தில் உள்ள அறை, ஒரே அறை என்பதால் அதற்கும் வர்த்தக மின் இணைப்பு மட்டுமே வழஙக முடியும் என்று தெரிவித்து வழஙகப்பட்டதாகவும் சில மாதஙகள் கழித்து வீட்டு இணைப்பாக மாற்றிக்கொள்ளலாம் என்று கூறியதாகவும் தெரிவித்துள்ளார். பிறகு மாடியில் SC No. 044–013–2436 உள்ள அறையில் ஒருவர் வசிப்பதால் வீட்டு மின் இணைப்பாக மாற்றி வழஙக கேட்டதற்கு, ஒரே ஒரு அறை மட்டும் இருப்பதாலும், மேற்படி அறையில் பழைய சாமான்கள் ஒரு பகுதியிலும், தனி நபர் ஒருவர் (school teacher) வாடகைக்கு குடியிருந்து கொண்டு அவ்வப்போது Tuition எடுப்பதாக தெரியவந்ததால் தான் வணிக மின் இணைப்பு வழஙகப்பட்டதாக தெரிவித்து வீட்டு மின் இணைப்பாக மாற்றித் தர எதிர்மனுதாரர் மறுத்துவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளரின் கட்டிடத்தை கள ஆய்வு செய்தபோது முதல் தளத்தில் உள்ள ஒரு அறையில் ஒரே ஒரு நபர் மட்டும் (school teacher)தனியாக வசித்து வருவதும், மேற்படி அறையின் ஒரு பகுதியில் பழைய சாமான்கள் வைத்திருப்பதும், அவ்வப்போது பள்ளி மாணவர்களுக்கு tuition எடுப்பதாகவும் தெரிய வந்ததால் வர்த்தக மின் இணைப்பு எண் 2436 TF V-ல் வழஙகப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டின் முதல் தளத்தில் வசிப்பவர் மேல்நிலை பள்ளி ஆசிரியர்களுக்கு அந்தந்த பள்ளிக்கே சென்று பயிற்சி வகுப்புகள் எடுப்பவர் என்றும், ஆன்மீக சொற்பொழிவு மற்றும் குழந்தைகளுக்கான பண்பாட்டு பயிற்சி அளிக்க நாட்டின் பல இடஙகளுக்கு சென்று வருபவர் என்றும் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரரோ தன்னுடைய வாதத்தில் ஒரே ஒரு அறைமட்டும் இருப்பதாகவும் பள்ளி மாணவர்களுக்கு tuition

எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், வீட்டு குடியிருப்பிற்குண்டான முகாந்திரம் ஏதும் இல்லாததால் வர்த்தக மின் இணைப்பு (SC No.**2436**, TF-V) கொடுக்கப்பட்டுள்ளதால் TF IA–ற்கு வீதப்பட்டி மாற்றம் செய்ய இயலாதென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.5** மேற்கண்ட வாதங்களின் மூலம் அறியவருவது மேல்முறையீட்டாளரின் முதல் தளத்தில் உள்ள அறையில் ஒரு தனிமனிதர் மட்டுமே தங்கியிருப்பதால் குடியிருப்பதற்குண்டான முகாந்திரம் இல்லையெனவும், ஆகவே TF IAவீதப்பட்டி வழங்க இயலாதெனவும் எதிர்மனுதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு தங்கியுள்ள நபர் ஆசிரியர் எனவும், அந்த அறையில் tuition எடுத்துவருவதாகவும் எதிர்மனுதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான ஆதாரம் ஏதும் எதிர்மனுதாரர்களால் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆதாரம் இல்லாமல் யூகத்தின் அடிப்படையில் tuition நடத்தப்படுவதாக அறிவித்து மின் இணைப்பு எண் **2436**–க்கு குடியிருப்புக்குண்டான வீதப்பட்டியை வழங்க மறுப்பது ஏற்புடையதல்ல என கருதுகிறேன். மேற்படி தனிநபர் வசிக்கும் இடம் ஒரே ஒரு அறையாக இருந்தபோதிலும், Order in T.P. No. 1 of 2017 dated 11.08.2017 பத்தி **6.2.2.1**–ன்படி குடியிருப்பு நோக்கத்திற்கான மின் உபயோகம் உள்ளது என்றே கருதுகிறேன். ஆகையால் மேற்படி மின் இணைப்பு எண் **2436**–ஐ வீட்டு மின் இணைப்பாக வீதப்பட்டி IA–ன் கீழ் மாற்றம் செய்யுமாறு தீர்வு செய்கிறேன். மேலும், முதல் மாடியில் குடியிருக்கும் நபர் வணிகரீதியாக மின்னிணைப்பை பயன்படுத்தும் நேர்வில் எதிர்மனுதாரர் எப்போது வேண்டுமானாலும் திடீர் ஆய்வு செய்து ஒழுங்குமுறை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கலாம்.

**8.0** <u>முடிவுரை</u>:

**8.1** பத்தி 7–ல் உள்ள தீர்வின்படி மின் இணைப்பு எண் **044–013–2436**–ஐ வீட்டு மின் இணைப்பிற்குண்டான வீதப்பட்டி TF IA–க்கு இந்த ஆணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து **15** நாட்களுக்குள் மாற்றித் தர ஆணையிடுகிறேன்.

**8.2** மேற்படி ஆணையை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை இந்த ஆணை கிடைத்த **30** நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறேன்.

8.3 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 12/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு. பழ. இராமன்,
48– மேல அக்ரஹாரம்,
கிருஷ்ணராயபுரம் (அஞ்சல்),
கரூர் மாவட்டம் – 639 102.

2. செயற்பொறியாளர்/இ.கா/குளித்தலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
98, சிறுபூஙகா தெரு, காவேரி நகர், குளித்தலை–639 104.

3. உதவி செயற்பொறியாளர்/இ.கா/குளித்தலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
39/49, வைகைநல்லூர் அக்ரஹாரம்,
குளித்தலை – 639 104.

4. உதவி பொறியாளர்/இ.கா/மாயனூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11KV துணை மின்நிலைய வளாகம்,
மாயனூர், குளித்தலை தாலுக்கா – 639 102.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், எண். 3, கோவை ரோடு, கரூர் – 639 002.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By Email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) –தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.